RNI-N0: TNTAM/2021/83936





# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்


Postel Regd. No: TN/5/SVA/2023-2025





சிவகங்கை | மலர்-4 | இதழ்- 241 | செப்டம்பர்.2 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## தமிழகம் முழுவதும் உள்ள 25 சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வு அமலுக்கு வந்தது




சென்னை, செப்.02-

தமிழகம் முழுவதும் உள்ள 25 சுங்கச்சாவடிகளில் கட்டண உயர்வு அமலுக்கு வந்துள்ளது.

மத்திய அரசின் கட்டுப்பாட்டில் செயல்படும் 78 சுங்கச்சாவடிகள் தமிழகத்தில் உள்ளன. 1992ல் போடப்பட்ட தேசிய நெடுஞ்சாலைகளுக்கு ஏப்ரல் மாதமும், 2008ல் போடப்பட்ட சாலைகளுக்கு செப்டம்பர் மாதமும் கட்டணம் உயர்த்தப்படுகிறது. கடந்த ஏப். 1ம் தேதி விழுப்புரம், அரியலூர், புதுக்கோட்டை உள்ளிட்ட இடங்களில் உள்ள 40 சுங்கச்சாவடிகளில் 5 முதல் 10 சதவீதம் சுங்கக் கட்டணம் உயர்த்தப்பட்டது.

புதிய சுங்கச்சாவடியில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் தொடரும் நிலையில், இதர 25 சுங்கச்சாவடிகளுக்கு நேற்று நள்ளிரவு முதல் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி, விக்கிரவாண்டி, மொரட்டாண்டி, தருமபுரி, கிருஷ்ணகிரி, சமயபுரம், ஓமலூர் உள்ளிட்ட சுங்கச்சாவடிகளில் 5 முதல் 7 சதவீதம் வரை கட்டண உயர்வு அமலுக்கு வந்துள்ளது. அதாவது ரூ.5 முதல் ரூ.70 வரை சுங்க கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் விலையும் உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கட்டண உயர்வுக்கு கண்டனம் தெரிவித்து பாமக தலைவர் அன்புமணி விடுத்த அறிக்கையில், "நெடுஞ்சாலைகளை முறையாகப் பராமரிக்கத் தவறும் நெடுஞ்சாலைகள் ஆணையத்துக்கு சுங்கக் கட்டணத்தை உயர்த்துவதற்கு தார்மீக ரீதியில் எந்த உரிமையும் கிடையாது. சுங்கச்சாவடி எண்ணிக்கை விவகாரத்தில் மத்திய, மாநில அரசுகள் கூட்டணி அமைத்துக் கொண்டு மக்களை ஏமாற்றுகின்றன. குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகும் செயல்படும் சுங்கச்சாவடிகளில் கட்டணம் வசூலிக்கக் கூடாது. ஆண்டுக்கு ஆண்டு சுங்கக்கட்டணத்தை உயர்த்தி மக்களை பரிதவிக்கச் செய்யக்கூடாது. உடனடியாக சுங்கக் கட்டண உயர்வை ரத்து செய்ய வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை சமூக வலைதளப்பதிவில், "சாலைகள் மற்றும் பாலங்களை சீரமைக்கவும், மேம்படுத்தவும் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. பொதுமக்கள் ஏற்கெனவே செலுத்திய கட்டணத்துக்கே உரிய வசதி கிடைக்காமல் இருக்கும் நிலையில், கட்டணத்தை மேலும் உயர்த்துவது நேரடியாக மக்களை சுரண்டும் செயலாகும். கட்டண உயர்வை கைவிடாவிட்டால், தமிழகம் முழுவதும் தொடர்ந்து போராட்டங்களை நடத்துவோம்" என்று தெரிவித்துள்ளார்.

## டெல்டாவில் சுற்றுப்பயணம் தொடங்க திட்டம்: விஜய்க்காக நவீன வசதிகளுடன் தயாராகும் பிரச்சார வாகனம்



சென்னை, செப்.02-

தவெக தலைவர் விஜய், தனது சுற்றுப்பயணத்தை டெல்டா மாவட்டத்தில் இருந்து தொடங்க திட்டமிட்டுள்ளார். அவருக்காக நவீன வசதிகளுடன் பிரச்சார வாகனம் தயார் செய்யப்பட்டுள்ளது.

தவெக தலைவர் விஜய், அண்மையில் மதுரையில் பிரம்மாண்ட மாநாட்டை நடத்தி முடித்தார். இதைத்தொடர்ந்து, தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். தவெகவின் இரண்டு மாநாடுகளையும் வட மற்றும் தென் மாவட்டங்களில் நடத்திய நிலையில், தனது சுற்றுப் பயணத்தை செப்டம்பர் 2வது வாரத்தில் டெல்டா மாவட்டங்களில் இருந்து தொடங்க விஜய் திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

அவரது சுற்றுப்பயணத்துக்கான ஏற்பாடுகளை தவெக பொதுச் செயலாளர் ஆனந்த் மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில், விஜய்யின் சுற்றுப்பயணத்துக்காக பல்வேறு வசதிகளுடன் கூடிய நவீன பிரச்சார வாகனம் பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அந்த வாகனத்தில் விஜய்யின் புகைப்படம் மற்றும் கட்சியின் கொள்கைகள் தொடர்பான வாசகங்கள் அடங்கிய ஸ்டிக்கர்களை ஒட்டும் பணிகள் தொடங்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

தொழில் பாதுகாப்பு: இதனிடையே விஜய் வெளியிட்டுள்ள அறிக்கை: அமெரிக்காவின் 50 சதவீத வரிவிதிப்பால், தமிழக ஏற்றுமதியாளர்கள் மீள முடியாத அளவுக்கு மிகக் கடுமையான பாதிப்புக்குள்ளாகி உள்ளனர். அவர்களுடன் தவெக எப்போதும் துணை நிற்கும். மேலும், தொழில் மற்றும் வேலை வாய்ப்பை பாதுகாப்பதற்காக மத்திய, மாநில அரசுகள் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொருளாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுத்து தமிழக ஏற்றுமதியாளர்களையும், ஏற்றுமதி சார்ந்த தொழில்களையும் தொழிலாளர்களையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சுமார் 4 கிலோ கத்தரிக்காயை உற்பத்தி செய்து கின்னஸ் உலக சாதனை படைத்த அமெரிக்க விவசாயி

பென்சில்வேனியா, செப்.02-

அமெரிக்காவின் பிலடெல்பியா மாகாணம் ஹாரிசன் சிட்டியைச் சேர்ந்த விவசாயி எரிக் குன்ஸ்ட்ராம், 3 ஆண்டுகளுக்கு முன்பு தனது தோட்டத்தில் கத்தரிக்காய் செடி வைத்தார். இதில் இப்போது மிகப்பெரிய அளவிலான கத்தரிக்காய் விளைந்துள்ளது.

இந்த கத்தரிக்காயின் எடை 3.969 கிலோவாக இருந்தது. வழக்கமான கத்தரிக்காயைப் போல 12 மடங்கு பெரியதாக உள்ள இது கிட்டத்தட்ட வீட்டுப் பூனையின் அளவு ஆகும்.

இதுகுறித்து கின்னஸ் சாதனை நிறுவனத்துக்கு தகவல் தரப்பட்டது. கடந்த ஆகஸ்ட் 19ம் தேதி அந்நிறுவன அதிகாரிகள் அந்த கத்தரிக்காயை ஆய்வு செய்தனர். அதன் எடையை உறுதி செய்த அவர்கள் உலகின் மிகப்பெரிய கத்தரிக்காய் என அதை அங்கீகரித்தனர். இதையடுத்து, இது கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெறுகிறது. முன்னதாக, 3.778 கிலோ எடை கொண்ட கத்தரிக்காயை உலகின் மிகப்பெரியது என கின்னஸ் அமைப்பு அங்கீகரித்திருந்தது. அந்த சாதனை இப்போது முறியடிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து குன்ஸ்ட்ராம் கூறும்போது, "உலகிலேயே மிகப்பெரிய கத்தரிக்காயை நான் உற்பத்தி செய்தேன் என்பது எனக்கு பெருமையாக உள்ளது" என்றார்.

# சில நாடுகள் பயங்கரவாதத்தை வெளிப்படையாக ஆதரிக்கின்றன

## பாக். பிரதமர் இருந்தபோதே மறைமுகமாக சாடிய மோடி

தியான்ஜின்: செப்.2-

"சமீபத்தில், ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதத்தின் மோசமான பக்கத்தைக் கண்டோம். இதுபோன்ற சூழ்நிலையில், சில நாடுகள் பயங்கரவாதத்தை வெளிப்படையாக ஆதரிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதா என்ற கேள்வி எழுவது இயற்கையானது" என ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி பேசினார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) கடந்த 2001ம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்த அமைப்பில் சீனா, ரஷ்யா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், இந்தியா, பாகிஸ்தான், ஈரான், பெலாரஸ் ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

இந்நிலையில், எஸ்சிஓ அமைப்பின் 2 நாள் உச்சி மாநாடு சீனாவின் தியான்ஜின் நகரில் நேற்று தொடங்கியது. இதில் பிரதமர் மோடி பங்கேற்றார். மாநாட்டின் ஒரு பகுதியாக, சீன அதிபர் ஜி ஜின்பிங்கை நேற்று பிரதமர் மோடி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப்பும் கலந்து கொண்ட 25வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சிமாநாட்டில் பேசிய பிரதமர் மோடி, "பயங்கரவாதம் என்பது எந்த ஒரு நாட்டின் பாதுகாப்பிற்கும் மட்டுமல்ல, ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் அச்சுறுத்தல் ஆகும்.

கடந்த 40 ஆண்டுகளாக பயங்கரவாதத்தின் தாக்குதலை இந்தியா அனுபவித்து வருகிறது. சமீபத்தில், ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் பயங்கரவாதத்தின் மோசமான பக்கத்தைக் கண்டோம். இந்த துக்க நேரத்தில் எங்களுடன் நின்ற நட்பு நாட்டிற்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயங்கரவாதம் தொடர்பாக எந்த இரட்டை நிலைப்பாடும் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்பதை நாம் தெளிவாகவும் ஒருமனதாகவும் கூற வேண்டும். இந்தத் தாக்குதல் (பஹல்காம்) மனிதநேயத்தில் நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு நாட்டிற்கும், நபருக்கும் வெளிப்படையான சவாலாக இருந்தது.

இதுபோன்ற சூழ்நிலையில், சில நாடுகள் பயங்கரவாதத்தை வெளிப்படையாக ஆதரிப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதா என்ற கேள்வி எழுவது இயற்கையானது. அனைத்து வடிவங்களிலும், வண்ணங்களிலும் பயங்கரவாதத்தை நாம் ஒருமனதாக எதிர்க்க வேண்டும். இது மனிதகுலத்திற்கு எதிரான நமது கடமை.

எஸ்சிஓ வின் பிராந்திய பயங்கரவாத எதிர்ப்பு கட்டமைப்பின் (RATS) கீழ் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் இந்தியா முன்னணியில் உள்ளது. கூட்டு தகவல் நடவடிக்கையை வழிநடத்துவதன் மூலம் அல் கொய்தா மற்றும் அதனுடன் தொடர்புடைய பயங்கரவாத அமைப்புகளை எதிர்த்துப் போராட இந்தியா முன்முயற்சி எடுத்தது. பயங்கரவாத நிதியுதவிக்கு எதிராக நாங்கள் எங்கள் குரலை எழுப்பினோம். அதில் உங்கள் ஆதரவிற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ்சிஓவின் இன் உறுப்பினராக இந்தியா மிகவும் நேர்மறையான பங்கைக் கொண்டுள்ளது. எஸ்சிஓவிற்கான இந்தியாவின் தொலைநோக்குப் பார்வை மற்றும் கொள்கை என்பது பாதுகாப்பு, இணைப்பு மற்றும் வாய்ப்பு ஆகிய மூன்று முக்கியமான தூண்களை அடிப்படையாகக் கொண்டது." என்று அவர் கூறினார்.

## மாநிலங்களவை சீட் தருவதாக உறுதி கூறிவிட்டு முதுகில் குத்திவிட்டார் பழனிசாமி: பிரேமலதா குற்றச்சாட்டு



சென்னை, செப்.02-

அதிமுக தேமுதிக கூட்டணி ஒப்பந்தத்தில் மாநிலங்களவை சீட் தருவதாகக் கூறி பழனிசாமி நம் முதுகில் குத்திவிட்டார் என தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா நிர்வாகிகள் மத்தியில் கடுமையாக விமர்சித்துள்ளார்.

சென்னையில் தேமுதிக தென்சென்னை வடக்கு மாவட்ட பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் கட்சியின் பொதுச்செயலாளர் பிரேமலதா பேசியதாவது:

செப்டம்பர் மாத இறுதிக்குள் பூத் கமிட்டி பணிகளை நிறைவு செய்ய வேண்டும். தேர்தலுக்கு சில மாதங்களே உள்ள நிலையில் கடினமாக உழைக்க வேண்டும். மேலும், அதிமுகவுடன் 2024 நாடாளுமன்ற தேர்தலில் கூட்டணி அமைத்த போது 5 மக்களவை தொகுதிகளும், 1 மாநிலங்கவையும் ஒதுக்குவதாக தெரிவித்தனர். ஆனால் அந்த சீட் நமக்கு கொடுக்கவில்லை. சீட் தருவதாக கூறி பழனிசாமி நம்மை முதுகில் குத்திவிட்டார். முதல்வராக இருந்தவர், கட்சி தலைவராக இருக்கிறார், கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவார் என நம்பினோம். ஆனால் ஏமாற்றிவிட்டார்.


எம்ஜிஆர், ஜெயலலிதா காலத்தில் கூட்டணி குறித்த ஒப்பந்தத்தில் தேதி குறிப்பிட்டு கையெழுத்திடுவதில்லை, அதேபோல தான் தேமுதிகவுடன் கூட்டணி ஒப்பந்தத்தில் தேதி குறிப்பிட வேண்டாம் என இபிஎஸ் கேட்டார். அதனால் நம்பிக்கையின் பேரில் கையெழுத்திட்டோம். அதனால்தான் நாம் ஏமாந்துவிட்டோம். பழனிசாமியின் பிரச்சார கூட்டத்துக்கு காசு கொடுத்து தான் அழைத்து வருகிறார்கள். இவ்வாறு அவர் பேசினர்.

இந்தக் கூட்டத்தில் பேசிய தேமுதிக பொருளாளர் எல்.கே.சுதீஷ், "தேமுதிக எந்த கூட்டணியில் இடம்பெறுகிறதோ அந்த கூட்டணிதான் 2026 தேர்தலில் அமோக வெற்றி பெறும். சட்டப்பேரவையில் பிரேமலதா எனும் நான் என்ற குரல் 2026ல் ஒலிக்க போவது உறுதி" என கூறினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பிரேமலதா கூறியதாவது: இரண்டாம் கட்ட மக்கள் சந்திப்பு பயணம் செப்.5ம் தேதி திருவண்ணாமலையில் தொடங்கும். விஜயகாந்த்துக்கும், மூப்பனாருக்கும் 40 ஆண்டு கால நட்பு இருந்தது. எங்களது திருமணம் மூப்பனார் மற்றும் கருணாநிதி தலைமையில்தான் நடந்தது. அந்த அடிப்படையில்தான் நேற்று நடைபெற்ற நிகழ்வில் தேமுதிக கலந்துகொண்டது.

முதல்வரின் வெளிநாடு பயணம் சிறப்பாக அமைய வாழ்த்துக்கள். அவரது பயணம் தமிழகத்துக்கு முதலீடுகளை ஈர்க்கும் விதத்தில் உபயோகமாக இருக்க வேண்டும். அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமியின் கூட்டங்களுக்கு காசு கொடுத்து ஆட்கள் வரவழைக்கப்படுகின்றனர் என்பது நான் சொல்லி தெரிய வேண்டியதில்லை. அனைத்து கட்சி கூட்டங்களுக்கும் காசு கொடுத்துதான் மக்களை அழைத்து வருகின்றனர். இதில் தேமுதிக விதிவிலக்கு. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஆயத்த ஆடை தொழிலில் ஏற்பட்டுள்ள தொய்வைப் போக்க ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்: பழனிசாமி வலியுறுத்தல்



சென்னை, செப்.02-

ஆயத்த ஆடை தொழிலில் ஏற்பட்டுள்ள தொய்வைப் போக்க முதல்வர் ஸ்டாலின் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அமெரிக்க அரசு உயர்த்தியுள்ள இறக்குமதி வரியால் பாதிப்படைந்துள்ள திருப்பூர் பின்னலாடைத் தொழிலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள் என்று பிரதமரை, தமிழக முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். 2021ல் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் தற்போது வரை ஜவுளி மற்றும் பின்னலாடைத் தொழில்களுக்கு தமிழக அரசு ஏற்படுத்திய இடையூறுகள், பிரச்சினைகள் ஏராளம். அதனால், அந்தத் தொழில்கள் ஏற்கெனவே நலிவடைந்துள்ளது என்பதே உண்மை.

நான்கு முறை வெளிநாட்டு சுற்றுப் பயணம் மேற்கொண்டும், கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் இயங்கும் ஜவுளித் தொழிலுக்கு எந்த வெளிநாட்டு முதலீடுகளையும் ஈர்க்கவில்லை. உள்நாட்டு முதலீடுகளும் மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு செல்கின்றன.

கழிவுப் பஞ்சில் இருந்து தயாரிக்கப்படும் நூலிழைகளைப் பயன்படுத்தி காடா துணி, கலர் நூல்களில் போர்வை, மெத்தை விரிப்பு போன்றவற்றை உற்பத்தி செய்யும் ஓபன் எண்ட் ஸ்பின்னிங் மில்கள், உற்பத்தி நிறுத்தப் போராட்டங்களை நடத்தின. இவர்களின் கோரிக்கைகளை இந்த அரசு கண்டுகொள்ளவே இல்லை.

திமுக ஆட்சியில் தமிழகம் பாழடைந்ததை மறைக்க, எதற்கெடுத்தாலும் மத்திய அரசின் மீது ஸ்டாலின் பழிபோடுகிறார். அமெரிக்காவின் தற்போதைய கூடுதல் வரி விதிப்பால், நம் நாட்டில் பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடைகள் ஏற்றுமதியாளர்களுக்கு எந்த இடையூறும் ஏற்படாத வகையில், மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதியை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமருக்கு, அதிமுக சார்பில் நான் கடிதம் எழுதியுள்ளேன்.

அதில், உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு உடனடி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியும், தொழில் துறைக்கு நிவாரணம் அளிக்கவும், கடன் மற்றும் வட்டியை 6 மாதங்களுக்கு நிறுத்திவைக்கவும், வட்டியை தள்ளுபடி செய்யவும் நடவடிக்கை எடுத்து, தொழிலாளர்கள் வேலையிழப்பைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளேன்.

அமெரிக்காவில் இந்தியப் பொருட்களை இறக்குமதி செய்பவர்கள், கூடுதல் வரி செலுத்த வேண்டும். இதனால் இந்திய பின்னலாடை அமெரிக்க சந்தையில், பிறநாட்டு ஜவுளிப் பொருட்களுடன் போட்டியிட முடியாமல் விற்பனை குறையும். எனினும், தமிழகத்தில் பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை தங்கு தடையின்றி உற்பத்தி செய்தால்தான், பிற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய முடியும். நமது நாட்டுக்கும் அந்நியச் செலாவணி கிடைக்கும்.

ஆயத்த ஆடை தொழிலில் ஏற்பட்டுள்ள தொய்வைப் போக்க தமிழக அரசு உடனடியாக ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



■ சுதந்திரப் போராட்ட மாவீரர் பூலித்தேவன் 310ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தென்காசி மாவட்டம் சிவகிரி வட்டத்திற்குட்பட்ட நெல்கட்டும்செவல் கிராமத்தில் அமைந்துள்ள மாவீரர் பூலித்தேவன் அவர்களின் நினைவு மாளிகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் மூலம் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர் அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு அன்னாரது திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

# உச்சகட்ட மோதலில் தென்காசி திமுக? கண்டு கொள்ளாத தலைமை?

## கைகட்டி நிக்கும் கனிமொழி திமுக தொண்டர்கள் குமுறல்








தென்காசி, செப்.02-

தென்காசி திமுக தெற்கு மாவட்ட செயலாளர் ஜெயபாலன் சொந்த கட்சியினரை மட்டுமின்றி, தோழமை கட்சியினரையும் மதிக்காமல் கலெக்ஷன், கமிஷன் என தனி ரூட்டில் பயணிப்பதால் திமுக மற்றும் தோழமை கட்சியினர் உச்ச கட்ட வெறுப்பில் உள்ளனர். குறிப்பாக அரசு பணிக்கான டெண்டர் விஷயத்தில் கட்சிகாரர்களை தவிர்த்து அதிமுக நிர்வாகியோடு கைகோர்த்து செயல்படுவதால் திமுகவினரின் டென்ஷன் நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. தென்காசி மாவட்ட திமுக ஆரம்பம் முதலே கோஷ்டி பூசல், அடிதடிக்கு பஞ்சமில்லாத மாவட்டமாமும். ஆவுடையப்பன் கருப்பசாமிபாண்டியன் போன்ற ஆளுமை மிக்க மாவட்ட செயலாளர்கள் இருந்தவரை ஓரளவிற்கு கட்டுபாடுள்ள மாவட்டமாக விளங்கி வந்தது. ஆனால் அவருக்கு பின்பு வந்தவர்கள் மற்றும் தற்போதுள்ள ஜெயபாலன் ஆகியோர் திமுகவை எந்த நிலையிலும் பலப்படுத்த முனையாமல் கோஷ்டி பூசலுடன் சுயலாபம் ஒன்றே குறிக்கோள் என்று காலம் கழிக்கின்றனர். இதனால் தென்காசி மாவட்டத்தில் திமுக நாளுக்கு நாள் செல்வாக்கு இழந்து வருகிறது. தனது கட்சிகாரர்களை அரவணைகாததோடு காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகள், மதிமுக , விசிக போன்ற தோழமை கட்சிகளையும் மதிக்காமல், நட்பு பாராட்டாமல் செயல்படுவதால் தென்காசி மாவட்டத்தில் திமுகவின் எதிர்கால தேர்தல் வெற்றி கேள்வி குறியாகி உள்ளது. எந்த பிரச்சனை என்றாலும் அதில் கட்சியின் நலனை பார்க்காமல் தனது சுயலாபம் ஒன்றே குறிகோளாக கொண்டு செயல்படுவதால் மாவட்ட செயலாளர் ஜெயபாலன் நாளுக்கு நாள் கட்சியினரின் வெறுப்பிற்கு ஆளாகி வருகிறார். இந்த நிலையில் கனிமொழியின் அளவில்லா ஆசியோடு மாவட்டத்தில் குறுநில மன்னராக வலம் வரும் ஜெயபாலன் தான் வைத்தது தான் சட்டம் என்ற வகையில் நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை, குடிநீர் வடிகால் வாரியம், அறநிலையத்துறை மாவட்ட ஊரக முகமை போன்ற அனைத்து துறை டெண்டர்களிலும் இதுவரை இல்லாத அளவிற்கு நான் சொல்லுக்கு கட்டுப்படுபவர்களுக்கு மட்டும் ஒப்பந்தகாரர்களுக்கு பணிகளை பரிந்துரைக்கிறார். இதற்கெல்லாம் சிகரம் வைத்தார் போல தனது கட்சிகாரர் மற்றும் தோழமை கட்சிகாரர்களுக்கு பணிகளை பரிந்துரைக்காமல் அதிமுக நிர்வாகி மகனுக்கு பரிந்துரை செய்து பணிகள் வழங்குவதோடு அந்த அதிமுக நிர்வாகியோடு ரகசிய உடன்பாட்டோடு செயல்படுவதால் திமுகவினர் செய்வதறியாது திகைத்து வருகின்றனர். அதிமுக வடக்கு மாவட்ட துணை செயலாளராக உள்ள கடையநல்லூர் தொகுதி எம்.எல்.ஏவாக வெற்றி பெற்று ஜெயலலிதா காலத்தில் அமைச்சராக இருந்த செந்தூர் பாண்டியனுக்கு வலது கரமாக திகழ்ந்தவரோடு அப்போதிருந்தே டெண்டர் பணிகளை பிரித்து வழங்குவது கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களை வேலை வாங்குவதில் மிகவும் நிபுணத்துவம் பெற்றவர். கடந்த சட்டமன்ற தேர்தலின் போது அமமுவிற்கு சென்று மாவட்ட செயலாளராக செயல்பட்டு, அப்போது திமுகவில் இருந்து விலகி கடையநல்லூர் அமமுக வேட்பாளராக போட்டியிட்ட அய்யாத்துரை பாண்டியனுக்கு தேர்தல் பணியாற்றியவர். அமமுக தோல்விக்கு பின்பு மீண்டும் அதிமுகவிற்கு தாவியதோடு குறுகிய காலத்தில் தென்காசி வடக்கு மாவட்ட அதிமுக துணை செயலாளராகி கடையநல்லூர் எம்.எல்.ஏ கிருஷ்ணமுரளியின் நம்பிக்கைக்குரியவராக உள்ளார். இந்நிலையில் அவரது ரத்த உறவினர் நெடுஞ்சாலை, பொதுப் பணித்துறை போன்ற அரசு துறைகளில் ஒப்பந்தகாரராக பணிகள் செய்து வருகிறார். இவருக்கு தான் தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் அரசு பணிகளை பரிந்துரை செய்வதாக திமுகவினர் குற்றம் சாட்டுகின்றனர். திமுகவிற்காக இரவும் பகலும் உழைத்து அயராது பாடுபட்ட கட்சியினருக்கு முன்னுரிமை வழங்காமல் கமிஷனுக்காக எதிர்கட்சியினரோடு தோழமை பாராட்டுவது எந்த வகையில் நியாயம். இவரை போன்ற கலெக்ஷன், கமிஷன் ஏஜெண்டுகளை வைத்துக்கொண்டு 2026ம் ஆண்டு தேர்தலை எப்படி எதிர்க்கொள்வது? பரமசிவன் கழுத்து பாம்பு போன்று, மண்டல பொறுப்பாளரும் எம்.பியுமான கனிமொழியின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கும் ஜெயபாலன் குறித்து தலைமையிடம் புகார் செய்தால் எடுபடுமா என்று திமுகவினர் திகைத்து நிற்கின்றனர்.

## தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை கலைத்திருவிழா வெற்றி பெற்ற மாணவர்களுக்கு க்யூ. ஆர். கோடுடன் கூடிய டிஜிட்டல் சான்றிதழ் வழங்கப்பட்டது



மானாமதுரை, செப். 02-

மானாமதுரை தமிழக அரசின் பள்ளிக் கல்வித் துறை சார்பில் ஒன்று முதல் பனிரெண்டு வகுப்பு முடிய உள்ள மாணவ மாணவிகளுக்கு பசுமையும் பாரம்பரியமும் என்ற தலைப்பில் கலைத்திருவிழா போட்டிகள் அறிவிக்கப்பட்டது.

அதன்படி சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டாரம் தெ.புதுக்கோட்டை அரசு நிதியுதவி பெறும் எம்.கே.என். நடுநிலைப்பள்ளியில் 12 வகுப்பு,3,4,5 வகுப்பு,6,7,8 வகுப்பு என மூன்று பிரிவுகளாக பிரித்து பாடல் ஒப்புவித்தல்,கதை கூறுதல், ஓவியம் வரைதல், திருக்குறள் ஒப்புவித்தல், களிமண் வேலைப்பாடு, மணல் சிற்பம், ரங்கோலி கோலம் போன்ற பதினாறு வகையான தலைப்புகளில் பள்ளி அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு அதில் முதல், இரண்டாம், மூன்றாம் பரிசு என 48 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு பள்ளி அளவில் பள்ளி தலைமை ஆசிரியர் சிவகுருநாதன் பாராட்டு சான்றிதழ் வழங்கினார். இந்த சான்றிதழில் பள்ளி மாணவர்கள் புகைப்படம் மற்றும் புதிய முயற்சியாக க்யூ.ஆர்.கோடு பிரிண்ட் செய்து வழங்கப்பட்டது.

இதனை பள்ளி மாணவர்கள் ஸ்கேன் செய்து பார்க்கும் போது பள்ளிக்கென்று உருவாக்கப்பட்ட கூகுள் இணைய தளத்தில் பள்ளி சம்பந்தப்பட்ட முழு விபரங்களையும் பள்ளி, கூகுள் அமைவிடம், பள்ளி தொடங்கப்பட்ட ஆண்டு, பள்ளி அடிப்படை கட்டமைப்பு வசதிகள், பள்ளி திறக்கும் நேரம், தொடர்பு கொள்ளும் தொலைபேசி எண் ஆகிய விபரங்களை காணும் வசதி உள்ளது.மேலும் தமிழக அரசின் கலைத்திருவிழா லோகோ பிரிண்ட் செய்து வழங்கப்பட்டது.இந்த சான்றிதழ் மாணவர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## அனகாபுத்தூரில் விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு வி.எம்.யோகா அகடாமி சார்பில் யோகானச நிகழ்ச்சி



அனகாபுத்தூர், செப்.02-

செங்கல்பட்டு மாவட்டம் அனகாபுத்தூரில் விநாயகர் சதுர்த்தி விழாவில் 50க்கும் மேற்பட்ட சிறுவர், சிறுமியர் பல்வேறு யோகாசனங்களை செய்து அசத்தியது பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

அனகாபுத்தூரில் வீரசக்தி விநாயகர் ஆலயத்தில் 3ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா வெகு சிறப்பாக நடைப்பெற்று வருகிறது. விநாயகர் சதுர்த்தி விழாவை முன்னிட்டு 15 அடி உயர்த்தி பிரமண்டமாக வடிவமைக்கப்பட்டுள்ள விநாயகர் சிலைக்கு தினந்தோறும் சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு அன்னதானம் வழங்கப்பட்டு வந்து வருகிறது. இந்தநிலையில் இன்று விநாயகர் பிரஷ்டி முன்னிட்டு


முன்னிட்டு கோவிலில் வி.எம் யோகா அகடாமி மாணவர்களின் யோகா கலை நிகழ்ச்சிகள் நடைப்பெற்றது. இதில் அந்த பகுதியை சேர்ந்த சிறுவர், சிறுமியர் ஒன்றுணைந்து பல்வேறு யோகாசனங்கள் செய்து அசத்தினர்.

பூர்ன தனுராசனம், பூர்ன கபோட சனம், பூர்ன உஷ்ராசனம், லகு வஜ்ராசனம், பூர்ன சலபாசனம், தடாசனம், பத்மாசனம், சுகாசனம், வஜ்ராசனம், சவாசனம், புஜங்காசனம், மற்றும் விருட்சாசனம் உள்ளிட்ட பல்வேறு ஆசனங்களை மாணவர்கள் குழுவாக செய்து காட்டியது கோவிலுக்கு வந்த பக்தர்களை வெகுவாக கவர்ந்தது.

பொதுவாக கோவில் திருவிழாக்களில் ஆடல் பாடல், கச்சேரி என நடத்தும் நிலையில் மாணவர்களின் திறமை வெளிகொண்டும் வகையில் யோகா செய்து பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை அனகாபுத்தூர் யோகா வி.எம் அகடாமி நிறுவனர் மாஸ்டர் ஜே.சசிகலா செய்திருந்தார்.

## பெரியகோட்டை ஊராட்சி கருத்தாண்டி குடியிருப்பு தனிநபர் ஆக்கிரமிப்புகளை அகற்றி பட்டா கோரி மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தனர்




சிவகங்கை, செப்.02-

சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் பெரியகோட்டை ஊராட்சி கருத்தாண்டி குடியிருப்பு பொதுமக்கள் சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோர் ஒன்றுகூடி மாவட்ட ஆட்சியரிடத்தில் கோரிக்கை மனுவினை கொடுத்தனர். அந்த மனுவில் 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருவதாகவும், குடியிருப்பு அருகே அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு இடங்கள் நிறைய உள்ளதாகவும் , இந்த இடத்தினை தனிநபர்கள் பலபேர் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், இந்த இடத்தில் நீர்வரத்துக் கால்வாய், அரசுக்கு சொந்தமான போர்வெல், மோட்டார் ஷெட், பழைய அங்காடிக் கட்டிடம், பழைய தொலைக்காட்சிப் பெட்டியறை உள்ளிட்ட அரசுச் சொத்துக்கள் பல உள்ளதாகவும் , இதனை உரிய நடவடிக்கை எடுத்து பொதுமக்களது பொதுத் தேவைகளுக்கான அடிப்படை வசதிகளை செய்துதருமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்... மேலும் தனிநபர்கள் பலரும் இந்த இடத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் விவசாயம் பாதிக்கப்படுவதாகவும், மழைக்காலங்களில் விவசாய நிலங்களுக்கு சென்றுவர நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதாகவும் ஆக்கிரமிப்பு செய்துள் ளவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து தங்களது வாழ்வாதாரத்தை காத்திட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

## நாளை செப்டம்பர் 3ஆம் தேதி மின்தடை அறிவிப்பு



சிவகங்கை, செப்.02-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் வரும் (செப்03) காலை 10 மணியிலிருந்து பிற்பகல் 2 மணி வரை இளையான்குடி, கீழாயூர், தாயமங்கலம், சோதுகுடி, கண்ணமங்கலம், புதூர், நகரகுடி, கருஞ்சுத்தி மற்றும் இதன் சுற்றுவட்டார பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என மானாமதுரை கோட்ட மின் செயற்பொறியாளர் சொர்ணப்பா அறிவித்துள்ளார்.


## குளிக்க சென்றபோது பள்ளத்தில் தவறி விழுந்த சிறுவன் பலி

சிவகங்கை, செப்.02-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அருகே உள்ள அரியக்குடி கிராமத்தில் உள்ள கண்மாயில் அதிகமான ஆழத்திற்கு மண்வெட்டி எடுத்ததால் பகுதியில் பெய்த மழையால் அப்பள்ளத்தில் தண்ணீர் சூழ்ந்து நின்றது அதே ஊரைச் சேர்ந்த சிறுவன் தண்ணீரின் ஆழம் தெரியாமல் குளிக்க சென்றபோது அப்பள்ளத்தில் தவறி விழுந்ததில் பரிதாபமாக உயிரிழந்தார். அதன் ஆழம் 10 முதல் 15 அடி என்று கூறப்படுகிறது . இது குறித்து காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்..



■ மதுரையில் கடந்த 30.8.2025 அன்று ராகவேந்திரா தனியார் மருத்துவமனையில் பிரசவத்திற்காக மகாலட்சுமி என்ற பெண் ஒருவர் அனுமதிக்கப்பட்டுள்ளார் அப்பெண்ணின் சிசேரியன் மூலமாக குழந்தை பெற்றெடுக்க முடியும் என்ற சூழலில் அவசரமாக ஏ பாசிடிவ் பிளட் தேவைப்பட்டதை அறிந்த DR. முகமது அலி ஜின்னா ஆணைக்கிணங்க தங்கம்மாள் ரஹீம் அறக்கட்டளையின் யூசுப் மாவட்டச் செயலாளர் மகாலட்சுமி என்ற பெண்மணிக்கு தனது குருதியை தரமாக வழங்கினார்.




## சுங்கச் சாவடிகளின் கட்டண உயர்வு அமலுக்கு வந்தது

சென்னை, செப்.02-

தமிழகத்தில் விக்கிரவாண்டி, திருச்சி, சேலம் மேட்டுப்பட்டி, மதுரை, தூத்துக்குடி உட்பட 20க்கும் மேற்பட்ட சுங்கச்சாவடிகளில் நள்ளிரவு முதல் கட்டண உயர்வு அமலுக்கு வந்தது.

குறைந்தபட்சம் ரூ.5ல் இருந்து அதிகபட்சம் ரூ.395 வரை சுங்கக் கட்டணம் உயர்வு. வாகன ஓட்டிகள் கடும் எதிர்ப்பு.



## திருப்புவனம் வருகை தந்த ஜி.கே. வாசகனுக்கு நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு

திருப்புவனம், செப் .02-

சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் தமிழ்நாடு மாநில காங்கிரஸ் கட்சி தலைவர் ஜிகே வாசன் பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவருக்கு மாநில தலைவர் அயோத்தி தலைமையில் மேளதாளங்கள் முழங்க பட்டாசு வெடித்து உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் மடப்புரம் கோவில் காவலாளி இறந்த அஜித் குமார் வீட்டிற்கு சென்று தாய் மற்றும் தம்பி நவீன் குமார் ஆறுதல் கூறினர்

ஜிகே வாசன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார் அவர் கூறும் போது பொதுமக்கள் நம்பிக்கையுடன் அரசுக்கு கொடுத்த மனுக்கள் எல்லாம் வைகை ஆற்றில் கிடந்தது அந்த திட்டத்தின் உண்மை முகத்தை பிரதிபலிக்கிறது உண்மையிலேயே பொது மக்களுக்கு உதவிக்கரமாக இருக்கும் திட்டம் என்றால் இந்த் நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடாது என்றும் ,ஏனோ தானோ திட்டம் வாக்கு வங்கிக்கான திட்டம் இந்த நிகழ்வு அமைந்திருக்கிறது என்றும் இந்த பிரச்சனைக்கு காரணஹர்த்தா என்று கூறி அதிகாரிகளை இட மாற்றுவது பல அதிகாரிகளை பலிகாடா ஆக்குவதற்கு இந்த சம்பவம் எடுத்துக்காட்டாக இருக்கிறது

சீமானின் மாநாடை யாரும் கொச்சைப்படுத்தக் கூடாது, தவறாக பேசக்கூடாது என்பது என் கருத்து ஆட்சி மாற்றத்திற்கு இன்னும் 6 மாதமே உள்ள நிலையில் முதல்வரின் வெளிநாட்டு பயனம் பலன் தராது தே.ஜ.க கூட்டனி தமிழகத்தில் பிரகாசமாக உள்ளது. நாளுக்கு நாள் அதன் வெற்றி வாய்ப்பு அதிகரித்துக்கொண்டே செல்கிறது கொள்ளை, கொலை, பாலியல் அதிகரித்துக்கொண்டே செல்கிறது அதற்கு முற்றுப்புள்ளி வைக்க தவறிய அரசாக இந்த அரசு உள்ளது ஜிஎஸ்டி சீர்திருத்த சட்டம் பயனளிக்காது முதல்வர் கூறியதற்கு ஜிகேவாசன் கூறும்போது

தமிழக அரசு நல்லரசு அனைத்து துறைகளிலும் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் அது ஜிஎஸ்டின் உடைய முறைதான் அதனுடைய கோட்பாடுகள் தான் அதே நிதி அமைச்சர் மாநிலங்களுக்கு சாதகமாக கூட்டத்தை கூட்டுகிறார் என்றால் எல்லா மாநிலங்களின் வளர்ச்சியே மனதில் வைத்து தான் என்று கூறினார்..



■ வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக, காயிதேமில்லத் கூட்டரங்கில், மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, பொதுமக்களிடமிருந்து 360 மனுக்களை பெற்று, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மாலதி, மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் எஸ்.ஆர்.என்.மதுசெழியன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமால், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் ஜெயசித்ரா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திமுக ஆட்சியில் தமிழகம் அனைத்து வகையிலும் முன்னேற்றம்: ஜெர்மனியில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை: செப்.2-

திராவிட மாடல் ஆட்சி தமிழ்நாட்டில் அமைந்த பிறகு, தமிழ்நாடு எல்லா வகையிலும் இன்றைக்கு முன்னேறிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, தொழில் வளர்ச்சியில், மிகவும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறோம் என்று ஜெர்மனியில் முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ஜெர்மனியின் கொலோன் நகரில் நடைபெற்ற மாபெரும் தமிழ் கனவு ஜெர்மனி வாழ் தமிழர்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார். அதில் பேசிய அவர், " பல்லாயிரம் கிலோ மீட்டர்களைக் கடந்து, வேறொரு நாட்டில் நீங்களும், நானும் சந்திக்கின்றபோது ஏற்படுகின்ற இந்த மகிழ்ச்சிதான், உண்மையான தமிழ்ப் பாசம். தமிழினப் பாசம் இது.

"உலகத்தின் எந்த மூலைக்குச் சென்றாலும், தமிழன் இருப்பான. தமிழ்க் குரலைக் கேட்கலாம்" என்று சொல்கின்ற அளவுக்கு உலகெல்லாம் பரவி, தங்களுடைய அறிவால், உழைப்பால் உயர்ந்திருக்கின்ற இனம்தான், நம்முடைய தமிழினம். நம்முடைய இனத்திற்கான இதுதான் மிகப் பெரிய பெருமையாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

ஜெர்மனி நாட்டில் உங்கள் எல்லோரையும், அதுவும் உங்கள் ஒவ்வொருவரையும் சந்திக்கின்றபோது மகிழ்ச்சி. நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு மதிப்புமிக்க பொசிஷனில் இருப்பதை பார்க்கும்போது, தமிழ்நாட்டின் முதலமைச்சராக, திராவிட இயக்கத்தைச் சேர்ந்தவனாக மிகந்த மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமை அடைகிறேன்.

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி தமிழ்நாட்டில் அமைந்த பிறகு, தமிழ்நாடு எல்லா வகையிலும் இன்றைக்கு முன்னேறிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, தொழில் வளர்ச்சியில், மிகவும் வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறோம். நம்முடைய தமிழ்நாட்டு வளர்ச்சியைப் பற்றி நீங்கள் எல்லாம் செய்தித்தாள்களில் படித்திருப்பீர்கள் சோஷியல் மீடியாக்களில் பார்த்திருப்பீர்கள். இங்கு இருக்கக்கூடிய உறவினர்கள், நண்பர்கள் மூலமாக கேள்வியும் பட்டிருப்பீர்கள்.

இந்த வளர்ச்சியை இன்னும் இன்னும் விரைவுப்படுத்த வேண்டும் என்று தான் முதலீட்டாளர்கள் மாநாடு, அதாவது முதலீடுகளை ஈர்க்க வெளிநாட்டு பயணம் ஆகியவற்றை நான் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறேன். **U.A.E,** ஜப்பான், ஸ்பெயின், சிங்கப்பூர், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கெல்லாம் பயணத்தை மேற்கொண்டு ஏராளமான முதலீடுகளைத் தமிழ்நாட்டை நோக்கி ஈர்த்து, நம்முடைய மக்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறோம்.

இப்படி வெளிநாடுகளுக்கு வரும்போது, முதலில் எனக்குள் என்ன தோன்றுகிறது என்றால், இந்த நாட்டில் வாழுகின்ற நம்முடைய தமிழர்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்களுடைய வாழ்க்கைத்தரம் எந்தளவுக்கு உயர்ந்திருக்கிறது? பெரும் பாடுபட்டு தலைநிமிர்ந்த இந்த இனம், இந்த மண்ணில் சுயமரியாதையுடன் நடைபோடுவதை பார்க்கவேண்டும் என்று நான் நினைப்பேன்.

அதிலும் முக்கியமாக, ஒரு அயலக மண்ணில், நம்முடைய தமிழைக் கேட்கவேண்டும் என்ற ஆசை எனக்கு வந்துவிடும். எல்லோருக்கும் அப்படிதான். அதனால்தான், ஜெர்மனிக்கு வந்தவுடனே முதலில் உங்களை சந்திப்பதற்கு வந்துவிட்டேன்.



இப்போது உங்களுடைய ஆரவாரத்தை கேட்கும்போது மகிழ்ச்சியை பார்க்கும்போது, நொடியில் தமிழ்நாட்டிற்கு டிராவல் செய்த உணர்வு ஏற்படுகிறது. மனிதன் எங்கே சென்றாலும், அவனுடைய வேர் இருக்கின்ற தாய்நிலத்தை மறக்க மாட்டான்.

அப்படித்தான் உங்களுடைய நினைப்பும், எப்போதும் தமிழ்நாட்டின் மீதே இருக்கும். தமிழ்நாட்டில் இருக்கின்ற நாங்களும் உங்களை அன்போடு பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதனால்தான் நம்முடைய திராவிட மாடல் அரசில், அயலகத் தமிழர்களின் நல்வாழ்வுக்காக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த ஆண்டு மட்டும், இந்த அயலகத் தமிழர் நாள் விழாவுக்கு எத்தனை நாடுகளில் இருந்து நம்முடைய தமிழர்கள் சென்னைக்கு வந்திருந்தார்கள் தெரியுமா? 62 நாடுகளிலிருந்து வந்தார்கள். சொந்த மண்ணில் கால் வைத்தபோது அவர்கள் அடைந்த மகிழ்ச்சியைப் பார்த்து அதை நான் ரசித்தேன் ௫ புலங்காகிதம் அடைந்தேன் ௫ பூரிப்படைந்தேன்.

அடுத்து, அயலகத் தமிழர் நலவாரியம். அயலகத் தமிழர்களுக்கான டோல்ஃப்ரீ ஹெல்ப்லைன், அதேபோன்று புலம்பெயர் தமிழர் அமைப்புகளுக்கு சுழல் நிதி, தமிழ்நாட்டுக்கு வெளியே வாழுகின்ற தமிழர்களுக்கு இன்ஷூரன்ஸ் என்று ஏராளமான திட்டங்களை செய்து கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, வெளிநாடுகளுக்கு வேலைக்குச் சென்று, எதிர்பாராதவிதமாக உயிரிழக்க நேரிடுகிறவர்களின் குடும்பத்திற்கு, நிதியுதவியும், பென்ஷனும் வழங்குகிறோம்.

இப்படி பார்த்து பார்த்து செய்து தருவதுடன், வெளிநாடுவாழ் தமிழர்களுக்கு ஒரு பிரச்சினை என்றால் ஓடோடி வந்து உதவுகிறோம். இதற்கு சில எடுத்துக்காட்டுகளை நான் சொல்ல விரும்புகிறேன். உக்ரைன் நாட்டில் இருந்து ஆயிரத்து 524 மாணவர்கள், சூடானில் இருந்து 253 பேர், இஸ்ரேலில் இருந்து 126 பேர், வங்கதேசத்தில் இருந்து 220 பேர், கம்போடியா தாய்லாந்து மியான்மர் ஆகிய நாடுகளிலிருந்து 119 பேரை மீட்டு வந்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, இன்னும் சில நெகிழ்ச்சியான சம்பவங்களையும் உங்களிடம் நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். காஞ்சிபுரத்தை சேர்ந்த மனோஜ் என்பவர், அமெரிக்காவில் இருந்து சென்னை வரும்போது, அவருடைய குழந்தை சந்தியாவுக்கு நடுவானில் கடுமையான உடல்நலக் குறைவு ஏற்பட்டது. உடனே விமானத்தை, இஸ்தான்புல்லில் தரையிறக்கினார்கள். அந்தக் குழந்தையை மேல் சிகிச்சைக்காக சென்னைக்கு அழைத்துக் கொண்டு வர 10 இலட்சம் ரூபாய் வழங்கினோம்.

மயிலாடுதுறையைச் சேர்ந்த முபாரக் அலி என்பவருக்கு தாய்லாந்தில் உடல்நலக்குறைவு ஏற்பட்டபோது 10 லட்சம் ரூபாய் செலவில், சென்னைக்கு அழைத்துக் கொண்டு வந்து சிகிச்சை அளித்தோம். குவைத் தீ விபத்தில் சிக்கிய 7 தமிழர்களுடைய உடலை மீட்டு ஒப்படைத்து, அந்த குடும்பங்களுக்கு 5 லட்சம் ரூபாய் வழங்கினோம்.

இரண்டாம் உலகப் போரில் போர் கைதிகளாக இருந்து மறைந்த தமிழர் நினைவாக, தாய்லாந்தில் நடுகல் அமைக்க 10 லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறோம். இதையெல்லாம் நான் குறிப்பிட்டு சொல்லக் காரணம்,

இப்போது நான் சொன்ன முன்னெடுப்புகள் எல்லாவற்றையும்விட, மிக முக்கியமான திட்டம்தான், வேர்களைத் தேடித் திட்டம். வெளிநாடுகளிலேயே செட்டில் ஆகிவிட்ட சிலர், "மண்ணை விட்டு பிரிந்து தூர தேசத்துக்கு வந்துவிட்டோமே, இனி இந்த சொந்தம் அவ்வளவுதானா" என்று உங்களுக்குள்ளே நிச்சயம் இது ஏற்பட்டிருக்கும். அப்படிப்பட்ட புலம்பெயர்ந்த தமிழர்களுடைய குழந்தைகளை, மாணவர்களை நம்முடைய தமிழ்நாட்டிற்கு அழைத்துக் கொண்டு சென்று, நம்முடைய மரபின் வேர்களை அறிமுகம் செய்து கொண்டிருக்கிறோம்.

2023 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தில், இதுவரைக்கும் 15 நாடுகளிலிருந்து 292 பேர் தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறார்கள். பலர், சில தலைமுறைகளாக விட்டுப் போன சொந்தங்களை தேடிக் கண்டுபிடித்து உருகியிருக்கிறார்கள். அவர்கள் கண்களில் இருந்து வழிந்த கண்ணீரும், அவர்கள் மனதில் தேங்கி நின்ற பாசமும்தான் இந்தத் திட்டத்தின் நோக்கத்திற்குக் கிடைத்த வெற்றி என்று நான் நினைக்கிறேன்.

"வாழ்வதும், வளர்வதும் தமிழும் தமிழினமுமாய் இருக்க வேண்டும்!" இதுதான் நம்முடைய திராவிட மாடல் அரசின் மோட்டோ! இதற்காகத்தான் தொடர்ந்து செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய அரசின் திட்டங்களை நாம் ஏற்படுத்தி தருகின்ற வாய்ப்புகளை நீங்கள் எல்லோரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதேசமயம், உங்கள் மீது இருக்கின்ற அன்போடும், உரிமையோடும் ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன்.

எப்போதுமே எங்கேயாவது முதலமைச்சர் சென்றால், தமிழ்நாட்டை பொறுத்தவரைக்கும் என்னிடம் ஒரு கோரிக்கையை வைப்பார்கள். ஆனால், நான் முதல்வராக இருந்து உங்களிடத்தில் இப்போது ஒரு கோரிக்கையை வைக்க வந்திருக்கிறேன். ஒன்றும் பயப்படவேண்டிய அவசியமில்லை.

உலக நாடுகளை குறிப்பாக, வளர்ச்சியடைந்த நாடுகள் எப்படி இருக்கவேண்டும் என்று பார்ப்பவர்கள் நீங்கள். இதுபோல நம்முடைய தமிழ்நாடும் வளரவேண்டும் என்று நான் நினைப்பது போல தான் நீங்களும் நிச்சயமாக நினைப்பீர்கள். என்னைவிட அதிகமாகதான் நினைப்பீர்கள். எனவே, உங்களால் முடிந்த உதவிகளைத் தொடர்ந்து உங்கள் தாய் மண்ணுக்கு நீங்கள் செய்யுங்கள் ௫ செய்வீர்கள் ௫ செய்து கொண்டிருப்பீர்கள்.

நீங்கள், சிறியதாக பிசினஸ் செய்து கொண்டிருந்தாலும், உங்கள் தொழிலைத் தமிழ்நாட்டிலும் தொடங்க முயற்சி செய்யவேண்டும். பெரிய பெரிய நிறுவனங்களில் நீங்கள் வேலை செய்கிறீர்கள் என்றால், உங்கள் நிறுவனத்தில், நம்முடைய தமிழ்நாட்டில் நிறைந்திருக்கின்ற வாய்ப்புகளைப் பற்றி எடுத்துச் சொல்லி, நம்முடைய தமிழ்நாட்டில் இன்வெஸ்ட் செய்ய மோட்டிவேட் செய்யுங்கள்.

உங்கள் சொந்த கிராமங்களை கவனித்துக் கொள்ளுங்கள். அங்கே படிக்கின்ற நம்முடைய அரசுப் பள்ளி மாணவர்களுக்கு, ஏழை எளிய மாணவர்களுக்கு உங்களால் முடிந்த கல்வி உதவிகளை செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன். இந்த பூமிப்பந்து முழுவதும் நீங்கள் எங்கே சென்றாலும், தமிழர் என்ற நம்முடைய அடையாளத்தை விடாதீர்கள். உங்கள் வேர்களை மறக்காதீர்கள்; தமிழை மறக்காதீர்கள்.

தமிழ் மண்ணையும், மக்களையும் மறக்காதீர்கள். ஆண்டுக்கு ஒருமுறையாவது தமிழ்நாட்டிற்கு குழந்தைகளுடன் வாருங்கள். தமிழ்நாட்டின் வளர்ச்சியை, மாற்றத்தைப் பாருங்கள். நம்முடைய பண்பாட்டை, வரலாற்றை, அரசியல் எழுச்சியை எடுத்துச் சொல்லும் கீழடி அருங்காட்சியகம், பொருநை அருங்காட்சியகம், கலைஞர் உலகம் என்று ஏராளமான இடங்கள் இருக்கிறது.

அதையெல்லாம் நீங்கள் மட்டுமல்ல, உங்கள் குழந்தைகளுக்கும் சுற்றி காண்பித்து, நம்முடைய வரலாற்றை எடுத்துச் சொல்லுங்கள். உங்கள் உறவாக, உங்கள் குடும்பத்தில் ஒருவனாக, இந்த நான் உங்களுக்காக தமிழ்நாட்டில் இருக்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



## ஐபிஎல் கிரிக்கெட்டில் இருந்து அஸ்வின் ஓய்வு: பிற டி20 லீக்கில் விளையாட ஆர்வம்

ஐபிஎல் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக ஆல்ரவுண்டர் அஸ்வின் அறிவித்துள்ளார். அதே நேரத்தில் உலக அளவில் நடைபெறும் பிற டி20 ஃப்ரான்சைஸ் லீக் தொடர்களில் விளையாட தனது ஆர்வத்தை அவர் வெளிப்படுத்தி உள்ளார்.

தனது ஐபிஎல் ஓய்வு அறிவிப்பை சமூக வலைதள பதிவு மூலம் அஸ்வின் பகிர்ந்தார். கடந்த ஆண்டு அவர் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. 38 வயதான அவர் கடந்த 2009ல் ஐபிஎல் கிரிக்கெட்டில் அறிமுகமானார். அதன் பிறகே 2010ல் சர்வதேச கிரிக்கெட்டில் அறிமுகமானார்.

சென்னை சூப்பர் கிங்ஸ், ரைசிங் புனே சூப்பர்ஜெயண்ட், பஞ்சாப் கிங்ஸ், டெல்லி கேப்பிட்டல்ஸ், ராஜஸ்தான் ராயல்ஸ் உள்ளிட்ட அணிகளுக்காக அவர் ஐபிஎல் கிரிக்கெட்டில் விளையாடி உள்ளார். கடந்த சீசனில் அவர் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் விளையாடி இருந்தார். ஆஃப் ஸ்பின்னரான அஸ்வின் 221 ஐபிஎல் போட்டிகளில் விளையாடி 187 விக்கெட்டுகளை கைப்பற்றி உள்ளார். 833 ரன்களை பேட்ஸ்மேனாக எடுத்துள்ளார்.

"சிறப்புமிக்க நாளில் சிறப்பான தொடக்கம். ஒவ்வொரு முடிவும் ஒரு புதிய தொடக்கத்தைக் கொண்டிருக்கும் என்று சொல்வதுண்டு. ஐபிஎல் கிரிக்கெட் வீரராக எனது காலம் முடிந்துவிட்டது. ஆனால், உலக அளவில் நடைபெறும் மற்ற டி20 லீக் தொடர்களில் நான் விளையாடுவதற்கான காலம் தொடங்குகிறது.

இத்தனை ஆண்டுகளாக எனக்கு அற்புத நினைவுகளையும், உறவுகளையும் தந்த எனது ஐபிஎல் அணிகளுக்கு நன்றி. முக்கியமாக எனக்கு இத்தனை நாட்களாக அனைத்தும் வழங்கி வந்த ஐபிஎல் நிர்வாகம் மற்றும் பிசிசிஐக்கு நன்றி. என்னுடைய அடுத்த கட்டத்தை ஆர்வமுடன் எதிர்நோக்கி உள்ளேன்" என அஸ்வின் கூறியுள்ளார்.

## இரட்டை தங்கம் வென்றார் சிப்ட் கவுர் சம்ரா



கஜகஸ்தானின் ஷிம்கென்ட் நகரில் ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற மகளிருக்கான 50 மீட்டர் ரைபிள் 3 பொசிஷன் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் சிப்ட் கவுர் சம்ரா, சீனாவின் யாங் யுஜியை எதிர்த்து விளையாடினார்.

இதில் சிப்ட் கவுர் சம்ரா 459.2 புள்ளிகளை குவித்து தங்கப் பதக்கம் வென்றார். யாங் யுஜி 458.8 புள்ளிகளுடன் வெள்ளிப் பதக்கம் பெற்றார். ஜப்பானின் நோபாடா மிசாகி 448.2 புள்ளிகளுடன் வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

மகளிருக்கான 50 மீட்டர் ரைபிள் 3 பொசிஷன் அணிகள் பிரிவில் சிப்ட் கவுர் சம்ரா, அஞ்சும் மவுத்கில், அஷி சவுஸ்கி ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி 1,753 புள்ளிகளை குவித்து தங்கப் பதக்கம் வென்றது.



## 7வது சுற்றில் பிரக்ஞானந்தா வெற்றி

அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் நகரில் சின்க்ஃபீல்ட் கோப்பை செஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் 7வது சுற்றில் இந்திய கிராண்ட் மாஸ்டரான ஆர்.பிரக்ஞானந்தா, பிரான்ஸின் அலிரேசா ஃபிரூஸ்ஜா எதிர்த்து விளையடினார். இதில் கருப்பு காய்களுடன் விளையாடிய பிரக்ஞானந்தா 31வது நகர்த்தலின் போது வெற்றி பெற்றார்.

உலக சாம்பியனான இந்தியாவின் டி.குகேஷ் தனது 7வது சுற்றில், அமெரிக்காவின் வெஸ்லி சோவுடன் மோதினார். இதில் கருப்பு காய்களுடன் விளையாடிய குகேஷ் 39வது நகர்த்தலின் போது தோல்வி அடைந்தார். 10 வீரர்கள் கலந்து கொண்டுள்ள இந்த தொடரில் 7 சுற்றுகளின் முடிவில் அமெரிக்காவின் பேபியானோ கருனா, பிரக்ஞானந்தா ஆகியோர் தலா 4.5 புள்ளிகளுடன் முதல் இரு இடங்களில் உள்ளனர். குகேஷ் 3 புள்ளிகளுடன் 9வது இடத்தில் உள்ளார்.

## தமிழ்நாடு அணிக்காக ஆடப்போவதில்லை ஷாக் கொடுத்த விஜய் சங்கர்



இப்போதுதான் புச்சிபாபு தொடரில் தமிழ்நாடு லெவன் அணிக்கு ஆடினார் விஜய் சங்கர். இந்த சூழலில் தமிழ்நாடு கிரிக்கெட் அணியிலிருந்து பிரிந்து செல்ல முடிவெடுத்துள்ளார்.

இதன் மூலம் தமிழ்நாடு அணியுடனான அவரது 13 ஆண்டுகால உறவு முடிவுக்கு வந்தது. விஜய் சங்கர், திரிபுரா அணிக்கு விளையாடப் போகிறார். 201112ல் தமிழ்நாடு அணியில் அறிமுகமானார். இப்போது தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் அவருக்கு ஆட்சேபனையின்மை (என்.ஓ.சி) சான்றிதழ் அளித்துள்ளது. எனவே திரிபுராவுக்கு விளையாடச் செல்கிறார் விஜய் சங்கர்.

புச்சி பாபு தொடரின் 2வது சுற்றில் மகாராஷ்டிராவுக்கு எதிரான போட்டியில் விஜய் சங்கர் அமர வைக்கப்பட்டதனால் இந்த முடிவை தன் 34வது வயதில் எடுத்துள்ளார். கடந்த ஆண்டும் விஜய் சங்கர், 2 ரஞ்சி போட்டிகளில் ஆடவில்லை. சையத் முஷ்டாக் அலி தொடரின் சில போட்டிகளிலும் விஜய் சங்கர் ஆடவில்லை.

அந்த சீசனிலேயே விஜய் சங்கர் நன்றாக ஆடிவந்த போதிலும் உட்கார வைப்பது குறித்து தன் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தது கவனிக்கத்தக்கது. இதனையடுத்து பொறுத்தது போதும் கிளம்பி விடலாம் என்று அவர் புதிய சவாலைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

202425 ரஞ்சி சீசனில் விஜய் சங்கர் 476 ரன்களை 52.88 என்ற சராசரியில் எடுத்து அசத்தினார். இதில் சத்தீஸ்கர் மற்றும் சண்டிகருக்கு எதிராக இரண்டு முக்கியமான சதங்களையும் அடித்தார்.

இதே போல் கடந்த ஆண்டு மற்றொரு நட்சத்திர தமிழ்நாடு வீரர் பாபா அபராஜித் கேரளாவுக்குச் சென்று விட்டார். இப்போது விஜய் சங்கர். இவர் 70 முதல் தரப் போட்டிகளில் ஆடியுள்ளார். 3,702 ரன்களை 45.14 என்ற சராசரியில் எடுத்துள்ளார். 11 சதங்கள், 43 விக்கெட்டுகளும் இவரது கரியரில் அடங்கும்.

201415 சீசனில் தமிழக அணியின் மிடில் ஆர்டர் நங்கூரமாகத் திகழ்ந்தார் விஜய் சங்கர். இதனையடுத்து அவர் இந்தியாஏ அணிக்குத் தேர்வு செய்யப்பட்டார். 201617 உள்நாட்டு ஒருநாள் தொடர்களான விஜய் ஹசாரே மற்றும் தியோதர் டிராபிகளில் தமிழக அணியை தன் கேப்டன்சியில் கோப்பையை வெல்ல இட்டுச் சென்றார். தெற்கு மண்டல அணியை வழிநடத்தி 202122 சீசனில் சையத் முஷ்டாக் அலி கோப்பையை வென்றார்.

விஜய் சங்கர் பங்களிப்பைப் பாராட்டிய தமிழ்நாடு அணியின் தலைமைப் பயிற்சியாளரான முன்னாள் வீரர் செந்தில்நாதன், இப்போது தமிழ்நாடு கிரிக்கெட் அரங்கில் திறமைகளுக்குப் பஞ்சமில்லை. இப்போது இளம் வீரர்களுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது என்றார்.




ஸ்ரீ ஸ்வஸ்திக் தொழிற்கல்வி திறன் மேம்பாடு மற்றும் நிறுவனத்தின் ஒரு பிரிவான ஸ்மார்ட் கிட்ஸ் அகாடமி, நோவா உலக சாதனை நிறுவனமும், இணைந்து

# அகரம்தென் பகுதியில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வர வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு புதிய உலக சாதனை படைத்ததற்காக சாதனை விருது வழங்கப்பட்டது

செங்கல்பட்டு, செப்.02-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சியில் உள்ள சேலையூர் மற்றும் அகரம் தென் பகுதியில் இயங்கி வரும் ஸ்ரீ வெங்கடேஸ்வர வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளியின் 333 மாணவர்கள் நாக்கு முறுக்குடன் கூடிய நிலையான கலை வடிவப் பிரிவில் 33 நிமிடம் 33 நாழியில் புதிய உலக சாதனை படைத்ததற்காக, ஸ்ரீ வெங்கடேஸ்வர வித்யாலயா மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு இந்த சாதனை விருதை ஸ்ரீ ஸ்வஸ்திக் தொழிற்கல்வி திறன் மேம்பாடு மற்றும் நிறுவனத்தின் ஒரு பிரிவான ஸ்மார்ட் கிட்ஸ் அகாடமி நோவா உலக சாதனை நிறுவனமும்,இணைந்து வழங்குவதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். இந்த குறிப்பிடத்தக்க சாதனை மாணவர்களின் கடின உழைப்பு, விதிவிலக்கான திறமை மற்றும் அர்ப்பணிப்பு மற்றும் குழுப்பணிக்கு ஒரு நற்சான்றாகும்.சாத்தியமானவற்றின் எல்லைகளைத் தாண்டி மகத்துவத்தை அடைவதற்காக எங்கள் மாணவர்களைப் பற்றி நாங்கள் நம்பமுடியாத அளவிற்கு பெருமைப்படுகிறோம். இந்த விருது அவர்களின் சிறந்த சாதனைக்கான ஒரு கொண்டாட்டமாகும், மேலும் இது மற்றவர்களை சிறந்து விளங்க ஊக்குவிக்கும் என்று நம்புகிறோம்.

இந்த தகுதியான அங்கீகாரத்திற்கு இப்பள்ளியின் தாளாளர்,ராஜா பள்ளியின் முதல்வர், ஸ்ரீ வித்யா, ஆசிரியர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் வாழ்த்துக்களை கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறோம் ஸ்ரீ ஸ்வஸ்திக் தொழிற்கல்வி திறன் மேம்பாடு மற்றும் நிறுவனத்தின் ஒரு பிரிவான ஸ்மார்ட் கிட்ஸ் அகாடமியின் நிறுவனர் யுவராணியின் முயற்சியாலும், மற்றும் நோவா உலக சாதனை நிறுவனமும், இணைந்து இந்நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்ப்பாடு செய்தனர்.

# அரசுப் பள்ளிகளில் எஸ்எம்சி கூட்டம்: பள்ளிக்கல்வித் துறை புதிய அறிவுறுத்தல்

சென்னை, செப்.02-

தமிழக அரசுப் பள்ளிகளில் உள்ள பள்ளி மேலாண்மைக் குழுக்களின் (எஸ்எம்சி) குழு உறுப்பினர்களின் வருகையை பதிவு செய்யும் முறையில் சில மாற்றங்களை பள்ளிக்கல்வித் துறை செய்துள்ளது.




அதன்படி, வருகைப் பதிவு செயலியில், கூட்டத்தில் பங்கேற்றவர், பங்கேற்காதவர் ஆகியவற்றுடன் கூடுதலாக 'காலியிடம்' என்ற பிரிவும் சேர்க்கப்பட்டுள்ளது.

தற்போது உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பதவிக் காலம் முடிவடைந்துள்ளதால், கூட்டத்தில் அவர்கள் பங்கேற்க தேவையில்லை. ஒருவேளை, அவர்கள் விரும்பினால் கூட்டத்தில் பங்கேற்க அனுமதிக்கலாம். ஆனால், அவர்களின் வருகையை பதிவு செய்ய வேண்டாம். அதற்கு மாறாக, செயலியில் காலியிடம் என்று குறிப்பிட வேண்டும். அதற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதை பின்பற்றுமாறு தலைமை ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# தென்காசி மாவட்டத்தில் அமைதியாக நடந்த விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் மாவட்ட காவல்துறைக்கு பெருந்தலைவர் காமராஜர் கழகம் பாராட்டு





தென்காசி, செப்.02-

தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி திருவிழா மற்றும் விநாயகர் விஜர்சனம் ஆகியவை தென்காசி மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு அரவிந்த் ஐபிஎஸ் அவர்களின் நேரடி மேற்பார்வையில் நடைபெற்று சட்டம் ஒழுங்கு பிரச்சனைக்கு குந்தகம் ஏதும் விளைவிக்காமல் அமைதியான முறையில் அனைத்து மதத்தினரும் அனைத்து சமூகத்தினரும் இணைந்து கொண்டாடியது சிறப்பு வாய்ந்ததாக பெருந்தலைவர் காமராஜர் கழகம் நிறுவனத் தலைவர் கீழப்பாவூர் பி கே அருணாசலம் கூறினார் இது குறித்து அவர் தெரிவித்ததாவது விநாயகர் சதுர்த்தி விழாவில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்த கலந்தாய்வு கூட்டம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு அரவிந்த்இ.கா.ப. அவர்கள் தலைமையில் மாவட்ட காவல் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது விநாயகர் சதுர்த்தி விழாவில் கடைபிடிக்க வேண்டிய முக்கிய விதிமுறைகள் குறித்த விநாயகர் சிலைகள் பிரதிஷ்டை செய்யும் பொறுப்பாளர்களுடனான கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது.இக்கூட்டத்தில் அனுமதிக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விநாயகர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட வேண்டும், விநாயகர் சிலை வைக்கும் இடத்தில் இரவு நேரங்களில் போதிய மின் வசதி இருக்க வேண்டும், சிலை அமைக்கப்பட்டுள்ள பகுதியில் தகரத்தினால் கூரை அமைக்கப்பட வேண்டும்,

சிலைகள் அமைந்துள்ள இடத்தில் தீ தடுப்பு உபகரணங்கள் அமைக்கப்பட வேண்டும் என உறுதிபடக்கோரி அதே போன்று சிலைகளை கரைக்கும் இடத்தில் பொதிய மின் வசதியோடு மாற்று மதத்தினருக்கோ அல்லது சட்ட ஒழுங்கை மீறும் வகையிலோ யாரும் நடந்து கொள்ளக் கூடாது என்ற உறுதிமொழி ஏற்று மிகவும் அமைதியாக தென்காசி மாவட்டத்தில் 400 சிலைகள் பல்வேறு பகுதிகளில் சிலை வைக்கப்பட்டு முதல் நாள் செங்கோட்டை பகுதியிலும் மறுநாள் கடையநல்லூரிலும் விஜர்ஜனம் செய்யப்பட்டது . தமிழக அரசின் காவல்துறை நண்பர்கள் சகோதரிகள் அனைவரும் பொதுமக்களுக்கோ விழா குழுவினருக்கோ எந்த ஒரு இடையூறும் இல்லாமல் எச்சரிக்கை உணர்வோடு பாதுகாப்பு வழங்கி சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்பாடாதவாறு பாதுகாப்பதற்காக பெருந்தலைவர் காமராஜர் கழக காவல்துறையினருக்கு நன்றி கூறி பாராட்டுகள் தெரிவிக்கப்படுவதோடு நன்றி கூறுவதாக பெருந்தலைவர் காமராஜர் கழக நிறுவன தலைவர் கீழப்பாவூர் பி கே அருணாசலம் தெரிவித்தார்..

# வரும் செப்டம்பர் 7ஆம் தேதி ஆனந்தன் செஸ் அகாடமி நடத்தும் மாநில செஸ் போட்டி பங்கேற்க வீரா வீராங்கனைக்கு அழைப்பு



தாம்பரம், செப்.02-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் வரும் செப்டம்பர் 7ஆம் தேதி நடக்க உள்ள மாநில அளவிலான செஸ் போட்டியில் பங்கேற்க அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ளது தமிழ்நாடு செஸ் சங்கம் ஆதரவில் ஆனந்தன் செஸ் அகடமி சார்பில் மாநில அளவிலான செஸ் போட்டி தாம்பரத்தில் உள்ள வள்ளுவர் குருகுலம் பள்ளியில் வரும் ஏழாம் தேதி நடக்கிறது இதில் 8 10 13 மற்றும் 25உட்பட்ட பிரிவுகளில் தனித்தனியாக போட்டிகள் நடைபெறுகின்றன போட்டிகள் சுவிஸ் முறையில் பிடே விதிப்படி நடைபெறுகின்றன அனைத்து பிரிவுகளில் முதல் பரிசு செஸ் கிளாக் அதனுடன் பதக்கங்களும் வழங்கப்படுகிறது அனைத்து பிரிவுகளில் முதல் 15 இடங்களில் பிடிப்போருக்கு கோப்பைகள் அடுத்து முதல் 10 இடங்களில் பிடிப்பதற்கு பதக்கங்களை வழங்கப்படுகிறது இதில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் பதிவு செய்யலாம் மேலும் விவரங்களுக்கு 9 7 10 28 69 34 மற்றும் 90 43 21 69 34 என்ற இந்த மொபைல் போன் எண்களில் தொடர்பு கொள்ளலாம்



# தாராபுரம் சாரா நர்சிங் கல்லூரியில் ஓணம் பண்டிகை நிகழ்ச்சி

தாராபுரம், செப்.02-

தாராபுரம் சாரா நர்சிங் கல்லூரியில் ஓணம் பண்டிகை நிகழ்ச்சி நடைபெற்றது. சாரா நர்சிங் கல்லூரி நிறுவனர் டாக்டர் ஜெய்லானி தலைமை தாங்கினார்.

சாரா நர்சிங் கல்லூரி தலைவரும், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினருமான பேராசிரியை. கே.மரியம் உல் ஆசியா, கல்லூரி துணை தலைவர் ஹாலிதா ஷமீம், கல்லூரி இயக்குனர் பொறியாளர் பி.எம்.கே. முகம்மது சதுர்த்தீன், கல்லூரி செயலாளர் பெனாசிர் பேகம், கல்லூரி முதல்வர் பேராசிரியை.டாக்டர். சு.பாரதி, கல்லூரி துணை முதல்வர் பேராசிரியை. தமிழரசி, பேராசிரியைகள் சுசிலா, ஷோபனா மற்றும் கல்லூரி நிர்வாக அலுவலர் ராஜேந்திரன், மக்கள் தொடர்பு அலுவலர் சகாபுதீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஓணம் பண்டிகை சிறப்பு குறித்து பேசினார். ஓணம் பண்டிகை சிறப்பு குறித்து மாணவிகள் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பிரமாண்டமான ஓணம் பண்டிகை சிறப்பு அறுவையுடன் 64 வகையான உணவுகள் அனைத்திற்கும் விருந்து அளிக்கப் பட்டது.

சிவகங்கை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் /சமூக நல இயக்குநர் மா.செள.சங்கீதா, மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில்,

# அனைத்துத் துறைகளின் சார்பில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசின் திட்ட செயல்பாடுகள் மற்றும் பயன்கள் குறித்து, கலந்தாய்வுக் கூட்டம் மேற்கொண்டார்



சிவகங்கை, செப்.02-

சிவகங்கை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / சமூக நல இயக்குநர் மா.செள.சங்கீதா மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், அனைத்துத் துறைகளின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் அரசின் திட்ட செயல்பாடுகள் மற்றும் பயன்கள் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி தலைமையில், கலந்தாய்வுக் கூட்டம் மேற் கொண்டு தெரிவிக்கையில்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு, பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, மக்களின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றிடும் வகையில் பல்வேறு புதிய சிறப்பு திட்டங்கள் புதிதாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், கடந்த 15.07.2025 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டமும், பொதுமக்களின் உடல் நலத்தினை பேணிக் காக்கின்ற வகையில் கடந்த 02.08.2025 அன்று முதல் செயல்படுத்தப்பட்டு வரும் "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் திட்டமும் அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், சிவகங்கை மாவட்டத்தில் செவ்வாய் கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் மற்றும் வாரத்தில் சனிக்கிழமை அன்று நடைபெற்று வரும் "நலம் காக்கும் ஸ்டாலின்" ஆகிய திட்ட முகாம்களின் வாயிலாக பொதுமக்கள் பெருமளவில் பயனடைந்து வருகின்றனர்.

இம்முகாம்களில், "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் முகாம்களின் வாயிலாக துறைகள் வாரியாக பெறப்பட்டு வரும் மனுக்களின் வகைகள் குறித்தும், அம்மனுக்களின் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும், அதேபோன்று "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாம்களின் வாயிலாக பொதுமக்களுக்கு வழங்கப்படும் மருத்துவ சேவைகள் மற்றும் அதனை பெறுவதற்கான சான்றுகள் ஆகியவைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் ஆகியன குறித்தும், அரசின் பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகள் மற்றும் பயன்கள் ஆகியன குறித்து துறை ரீதியாக எடுத்துரைப்பதற்கு ஏதுவாக, அரசின் அனைத்து துறை சார்ந்த முதன்மை அலுவலர்களுடன் இக்கூட்டமானது நடைபெற்று வருகிறது.

மேலும், மேற்கண்ட முகாம்கள் தொடர்பாக பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில், மேற்கொள்ளப்பட்டு வரும் விளம்பர பணிகள், குறிப்பாக மாற்றுத்திறனாளிகளுக்கான நலத் ட்டங்களை பெறுவதற்கு ஏதுவாக, மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அந்தந்த துறைகளின் சார்பில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களின் வகைகள், அதற்கான தீர்வுகள் ஆகியன குறித்து, அந்தந்த முகாம்களைச் சார்ந்த பொறுப்பு அலுவலர்கள் புள்ளி விபரங்களுடன் எடுத்துரைக்கலாம்.

ஒவ்வொரு துறைகள் வாரியாக தெரிவிக்கப்படும் கருத்துக்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகள், அவைகள் சார்ந்து சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகள் ஆகியவைகளை அடிப்படையாக கொண்டு, வருகின்ற 03.09.2025 அன்று மதிப்பிற்குரிய முதன்மை செயலர் அவர்களால் ஒவ்வொரு மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களுக்கான மேற்கொள்ள ப்படவுள்ள ஆய்வு கூட்டத்தில் கலந்தாலோசிக் கப்படவுள்ளது.

அரசின் திட்டப் பயன்களை தகுதியான எந்தவொரு பயனாளிகளும் விடுபடாமல் பெறுவதற்கு, அனைத்து துறையைச் சார்ந்த அலுவலர்களும் ஒருங்கிணைந்து சிறப்பான நடவடிக்கைகள் மேற்கொண்டு, உரிய திட்டப் பயன்களை பொது மக்களுக்கு கிடைக்கப்பெற செய்தல் வேண்டும் என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / சமூக நல இயக்குநர் மா.செள. சங்கீதா தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் மற்றும் "நலம் காக்கும் ஸ்டாலின்" சிறப்பு மருத்துவ முகாம் ஆகியவைகளுக்கான பொறுப்பு அலுவலர்கள், அந்தந்த பகுதிகளில் பெறப் பட்டுள்ள மனுக்களின் வகைகள் மற்றும் அம்மனுக்களில் தகுதியான பயனாளிகளுக்கு அம்முகாம்களிலேயே வழங்கப்பட்டுள்ள அரசின் திட்டப்பயன்கள் ஆகியன குறித்து, விரிவாக எடுத்துரைத்தனர். முகாம்களில் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி அவர்களின் கோரிக்கைகளை வழங்குவதற்கான இடங்கள் குறித்து முறையாக தகவல் பலகைகள் நிறுவிடவும் மற்றும் அம்முகாம்களில் ஒலிப்பெருக்கியின் வாயிலாக பொதுமக்களுக்கான தகவல்களை முறையாக வழங்கியும்,

குறிப்பாக முகாம்களில் கலந்துகொள்பவர்களுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளதை உறுதி செய்திடவும் அனைத்து துறை அலுவலர்களுக்கும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்கள் அறிவுறுத்தினர்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ்.செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் மரு.ஜி.அரவிந்த் அவர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.பிரான்சிஸ், மகளிர் திட்ட இயக்குநர் திருமதி கவிதப்பிரியா, இணைப் பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) திரு.இராஜேந்திர பிரசாத், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் திரு.விஜயகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.முத்துக்கழுவன் உட்பட அனைத்துத்துறை அரசு முதல்நிலை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.




# சிவகங்கையில் காலி மது பாட்டில்களை திரும்பப் பெறுவதற்கு எதிர்ப்பு மாவட்ட மேலாளர் அலுவலகம் முன்பு போராட்டம்

சிவகங்கை, செப்.02-

சிவகங்கை மாவட்டத்தில் காலி மது பாட்டில்களை திரும்பப் பெறும் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மாவட்டத்தில் உள்ள 115 கடை ஊழியர்கள் போராட்டம் செப். 1ம் தேதி முதல் காலி மது பாட்டில்களை திரும்பப் பெற வேண்டுமென அதிகாரிகள் வற்புறுத்துகின்றனர். ஆனால், பெரும்பாலான கடைகள் 10 அடி நீளம், 10 அடி அகலம் கொண்டவையாக உள்ளன. அவற்றில் மதுபாட்டில்களை வைக்கவே போதிய இடமில்லாத நிலையில், காலி மதுபாட்டில்களை எங்கே வைப்பது. மேலும், பாட்டில்கள் உடைந்து விட்டால் அதற்கு ஊழியர்கள் பணம் செலுத்த வேண்டும். ஏற்கெனவே மேலாண்மை இயக்குநர் தலைமையில் குழு அமைத்து, ஊழியர்களின் குறைகளை கேட்டறிந்த பின்னரே காலி பாட்டில்களை வாங்க நீதிமன்றம் உத்தரவிட்டது.ஆனால், எங்களிடம் எந்த குறையும் கேட்கவில்லை. மேலும், காலி பாட்டில்களை வாங்கிக் கொண்டு, ரூ.10 கொடுக்கச் சொல்கின்றனர். விற்பனை நடந்துகொண்டிருக்கும்போது அதை செயல்படுத்துவதில் சாத்தியமில்லை. இதனால், காலி பாட்டில்களை வேறு விதங்களில் திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.மாற்று வழி அவசியம்: பார்களிலிருந்து சேகரித்து வழங்கப்படும் பாட்டில் களுக்கு உடனே பணமாக திரும்ப வழங்கவும் அனுமதியில்லை. பல குழப்பங்களுடன் இத்திட்டத்தை செயல்படுத்த அரசு வேகம் காட்டி வருவதால் சிக்கல் அதிகரிக்கவே செய்யும். தொழிலாளர்கள் மனதளவில் கடும் பாதிப்புக்குள்ளாவர். எனவே, காலி பாட்டிங்கள் கொள்முதல் செய்ய மாற்று வழியை பின்பற்ற வேண்டும் என சிவகங்கை மாவட்ட மேலாளர் அலுவலகம் முன்பு போராட்டத்தில் ஈடுபட்டனர் பின்னர் அரசு வழங்கிய ஹால்பாட்டில் இருக்கான குக்கர்களை திரும்ப ஒப்படைத்து சென்றனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161